நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்

முன்னிலை திருமதி.வி.கீதா, பி.ஏ., எம்.எல்.,

நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்

2017ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20ம் நாள் திங்கட்க்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 1- 2017

---------

உணவு பாதுகாப்பு அலுவலர்,
சாத்தூர் நகராட்சிப் பகுதி .. குற்றமுறையிடுபவர்

- எதிர் -

1. பி.கே.ஜெயச்சந்திரன்
   த.பெ.கடற்கரை தங்கம்
   222, ரயில்வே பீடர் ரோடு, சாத்தூர்

2. க.முருகேசன்
   த.பெ.கடற்கரை தங்கம்
   வேணி டிரேடிங் கம்பெனி
   4182, வில்லாபுரம் ஹவுசிங் போர்டு
   மதுரை - 11

3. வேணி டிரேடிங் கம்பெனி,
   4182, வில்லாபுரம் ஹவுசிங் போர்டு
   மதுரை - 11
   (கம்பெனிக்காக உரிமையாளர்
   க.முருகேசன், த.பெ.கடற்கரை தங்கம்) ..எதிரிகள்

இவ்வழக்கு 20.01.2017ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசுத் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2, விருதுநகர் (பொறுப்பு) அவர்கள் ஆஜராகியும் எதிரிகளின் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.மைக்கேல் பாரதி, அவர்கள் ஆஜராகியும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

<u>தீர்ப்புரை</u>

9.09.2016ம் தேதி 10.15 மணியளவில் 222, ரயில்வே பீடர் ரோடு, சாத்தூர் என்ற முகவரியில் பலசரக்கு கடையில் 3வது எதிரியின் உரிமையாளரான 2வது எதிரி 1வது எதிரி மூலம் பாதுகாப்பற்றதும், தரமற்றதுமதுமான கடலை மாவை விற்பனைக்கு வைத்திருந்ததாகவும் எனவே எதிரிகள் 2006ம் வருட உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச்சட்ட பிரிவுகள் 3(1) (zz) (vii) 26(2) (i), 27(1) R/w.Sec.51, 52, 59(i) & 63 மற்றும்இதன் 2011ம்வருட உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய (உணவுப் பொருள் தரங்கள் மற்றும் சேர்பொருள்) ஒழுங்குமுறை

எண்.3.1.2(1)கீழ் தண்டிக்ககூடிய குற்றம் புரிந்துள்ளதாக உணவு பாதுகாப்பு அலுவலர் , சாத்தூர் நகராட்சிப் பகுதி குற்ற முறையீடு தாக்கல் செய்துள்ளார்.

2) இவ்வழக்கில் தாக்கலான ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிகளுக்கு குவிமுச 207வது பிரிவின்படி இலவசமாக வழங்கப்பட்டது போதிய கால அவகாசத்திற்கு பின்னர் எதிரிகளிடம் குற்றம் பற்றி வினவியபோதும், எதிரிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டு ஒரு குற்ற ஒப்புதல் மனு தாக்கல் செய்தனர்.

3) வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. 9.09.2016ம் தேதி 10.15 மணியளவில் 222, ரயில்வே பீடர் ரோடு, சாத்தூர் என்ற முகவரியில் பலசரக்கு கடையில் 3வது எதிரியின் உரிமையாளரான 2வது எதிரி 1வது எதிரி மூலம் பாதுகாப்பற்றதும், தரமற்றதுமதுமான கடலை மாவை விற்பனைக்கு வைத்திருந்ததாகவும் புகார்தாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் குற்றச்சாட்டு அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டிலேயே சம்பவ இடம், சம்பவ நேரம் மற்றும் எதிரிகளின் விவரம் குறித்து தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இந்நீதிமன்ற விசாரணையின்போது எதிாகிள் தம்மீதுள்ள குற்றத்தை ஒப்புக்கொண்டு குற்ற ஒப்புதல் மனுவும் தாக்கல் செய்துள்ளனர்.

4) முடிவாக 1, 2 எதிரிகள் மற்றும் 3வது எதிரிக்காக அதன் உரிமையாளரான 2வது எதிரி ஆகியோர் 2006ம் வருட உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச்சட்ட பிரிவுகள் 3(1) (zz) (vii) 26(2) (i), 27(1) R/w.Sec.51, 52, 59(i) & 63 மற்றும்இதன் 2011ம்வருட உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய (உணவுப் பொருள் தரங்கள் மற்றும் சேர்பொருள்) ஒழுங்குமுறை எண்.3.1.2(1)கீழ் குற்றவாளிகள் என தீர்மானித்து 1, 2 எதிரிகளுக்கு நீதிமன்றம் கலையும் வரை சிறை தண்டனையும் 1 முதல் 3 எதிரிகளுக்கு அபராதம் தலா ரூ.5000- விதித்தும் கட்டத் தவறினால் ஒரு மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. வழக்கின் மொத்த அபராதம் ரூ.15,000-

5) இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் இல்லை .

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2017ம்

ஆண்டு பிப்ரவரி மாதம் 20ம்நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

நீதித்துறை நடுவா் எண்.2,
சாத்தூா்.

<u>பின் இணைப்பு -</u> இல்லை.

நீதித்துறை நடுவா் எண்.2,
சாத்தூா்.

<u>பின் குறிப்பு -</u>

1) வழக்கின் முடிவு காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
2) வழக்கு விசாரனையின் போது எதிரிகள் பிணையிலிருந்தாா்.
3) இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல்இல்லை.
4) எதிரிகள் அபராதம் செலுத்திவிட்டனா்.

நீதித்துறை நடுவா் எண்.2,
சாத்தூா்.